**த. நா.ச.பே. எண் : 017** **நாள் : 22.06.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (22.6.2017) சட்டப்பேரவையில், திருவள்ளூர் மாவட்டம், காமராஜர் துறைமுகம் தொடர்பாக எழுப்பபட்ட கேள்விக்கு விளக்கம் அளித்தார்.**

---

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே !**

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காமராஜர் துறைமுகம் (முந்தைய எண்ணூார் துறைமுகம்) மத்திய அரசின் Mini Ratna அந்தஸ்து பெற்ற ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்.

இப்பொருள் சம்பந்தமாக காமராஜர் துறைமுக நிர்வாகம் மற்றும் மத்திய அரசின் கப்பல் போக்குவரத்துத் துறையிடமிருந்தும் எவ்வித அறிக்கையும் அரசுக்கு வரப்பெறவில்லை. 19.06.2017 அன்றைய செய்தித்தாள்தான், இத்துறைமுகத்தின் மத்திய அரசின் 100 சதவிகித பங்குகளை விலக்கிக் கொள்வதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சத்திலிருந்து இப்பொருள் சம்பந்தமான விவர அறிக்கை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**